## ஆய்வுச் சுருக்கம்

கல்வித்திட்டமிடல் உபதேசிய மட்டத்துக்கும் அடிநிலைக்கும் கொண்டுசெல்ல முற்பட்டதன் விளைவாக, பொது முகாமைத்துவத்தின் பணிகளும் மாவட்ட, கோட்ட மற்றும் பாடசாலை மட்டத்தில் திட்டமிடலும் தெளிவாக வரையறை செய்யப்பட்டன. இதனால் பாடசாலை ஒரு நிறுவனம் சார் திட்டமிடல் அலகாகக் கருதப்பட்டது. இதன் அடிப்படையில் ஐந்தாண்டுத் தட்டமிடலும், வருடாந்த அமுலாக்கல் திட்டமிடலும் முக்கியத்துவம் பெறுகின்றது. பாடசாலை மட்டத் திட்டமிடலானது அதிபர்களின் வலுவாண்மையை அதிகரித்துள்ளது. எனவே, இத்திட்டமிடலில் அதிபர்களின் தலைமைத்துவத் திறன்கள் செல்வாக்குச் செலுத்துகின்றனவா அவ்வாறு எனின் உயர்ந்தளவு செல்வாக்குச் செலுத்துபவை எவை, குறைந்தளவு செல்வாக்குச் செலுத்துபவை எவை, என்பவற்றை இனங்காண்டு திட்டமிடலை இலகுபடுத்தக்கூடிய விதப்புரைகளை முன்வைக்கும் நோக்குடன் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மாணவ தலைவர்கள், முகாமைத்துவக்குழு உறுப்பினர்கள், அதிபர்கள், கோட்டக்கல்விப் பணிப்பாளர், பிரதிக்கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்) ஆகியோரை மாதிரியாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்விலே, மாணவ தலைவர்கள், முகாமைத்துவக் குழு, அதிபர்கள் ஆகியோருக்கான வினாக்கொத்து, கோட்டக்கல்விப் பணிப்பாளர், பிரதிக்கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்), அதிபர்களுக்கான நேர்காணல், பொருத்தமான ஆவணங்கள் ஆகிய ஆய்கருவிகள் பயன்படுத்தித் தரவுகள் சேகரிக்கப்பட்டன.

இத்தரவுகள் புள்ளிவிபரவியல் நுட்பங்களைப் பயன்படுத்திப் பகுப்பாய்வு செய்யப்பட்டன. இதனடிப்படையில் வருடாந்த அமுலாக்கல் திட்டமிடலுக்கும் அதிபர்களின் தலைலமைத்துவத் திறன்களுக்குமிடையே உத்தம நேர்த் தொடர்பு காணப்படுகிறது. அதிபர்களின் தொழிற்தகுதி, அறிக்கைகள் தயாரிக்கும் திறன், சமூகத் தொடர்பாடல், பாடசாலைக்கு உள்ளேயான தொடர்பாடல் போன்றன மத்திமத்தை விட உயர்வான நேர்த் தொடர்பையும், SWOT பயன்பாடு, வலயக் கல்வி அலுவலகத்திடம் அதிபர்கள் பெற்ற பயிற்சி, வரவு செலவுத்திட்டம் தயாரிக்கும் திறன், போன்றன மத்திமத்தை அண்டிய நேர்த் தொடர்பையும் முகாமைத்துவக்குழுவின் பங்களிப்பு, ஏனைய தொழில் அனுபவங்கள் மிகக்குறைவான நேர்த் தொடர்பையும் கொண்டுள்ளன. அதிபர்களின் கல்வித்தகுதி, பயனாளிகளின் இணைவு, ஆசிரிய அனுபவம்,




OPEN UNIVERSITY OF SRI LANKA LIBRARY

அதிபர் அனுபவம் என்பன எதிர்த் தொடர்பைக் கொண்டுள்ளமை இனங்காணப்பட்டன. இனங்காணப்பட்ட தொடர்புகளின் அடிப்படையில் வருடாந்த அமுலாக்கல் திட்டத்தை இலகுபடுத்துவதற்கான விதப்புரைகளும் ஆய்வின் இறுதியில் முன்வைக்கப்பட்டுள்ளன.